IRDCRP

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

# கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டம் (IRDCRP) கூறு 01

# ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI – 2026/1)

## கிராமிய பொருளாதார மீள்திறன், நிலைத்தன்மை மற்றும் சுபீட்சத்தைக் கட்டியெழுப்புவதற்கு கைகோர்த்தல்

## "AgriConnect" உலக வங்கி குழும முயற்சி ஒன்றுடன் இணைந்து

உலக வங்கி குழுமத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் கமத்தொழில், கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் (MoALLI) ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டமானது (IRDCRP) உற்பத்தி கூட்டாண்மை அபிவிருத்தி முன்முயற்சியின் கீழ் பரிசீலிப்பதற்காக தமது ஆர்வ வெளிப்பாட்டை (EOI) சமர்ப்பிப்பதற்கு மதிப்புச் சங்கிலி முதலீடுகள், வர்த்தக மற்றும் ஏற்றுமதி நோக்குடைய விவசாய வர்த்தகங்கள் மற்றும் பெறுமதி சேர் செயற்பாடுகளில் புத்தாக்க வர்த்தக யோசனைகளுடனான விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள், பொது பட்டியலிடப்படாத நிறுவனங்கள், உற்பத்தியாளர் கூட்டுறவுகள், சம்மேளனங்கள், சங்கங்கள் மற்றும் ஏனைய இதனையொத்த அமைப்புகள் உட்பட உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

நவீன மற்றும் வர்த்தக ரீதியிலான பன்முகப்படுத்தப்பட்ட விவசாய உணவுத் துறையை மேம்படுத்துவது பொருளாதார மீட்சி மற்றும் கிராமிய சுபீட்சத்திற்கான அரச மூலோபாயத்தின் தீர்க்கமான பகுதி ஒன்றாக உள்ளது. அதன்படி, IRDCRP, கிராமிய சமூகங்களுக்காக நிலைபெறுதகு விவசாய-உணவு முறைமைகள், காலநிலை-ஸ்மார்ட் விவசாயம், செயல்திறன் நீர்முகாமைத்துவத்தை ஊக்குவிக்கிறது.

**மதிப்புச் சங்கிலி அபிவிருத்திக்கான உற்பத்திக் கூட்டாண்மைகள்**

விவசாய, கால்நடை, மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு, வாசனைச் சரக்குகள் மற்றும் தோட்டப் பயிர்களில் உற்பத்திக் கூட்டாண்மை மற்றும் மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவதன் மூலம் சந்தை அணுகளை மேம்படுத்துவதில் IRDCRP கூறு 1 அவதானம் செலுத்துகிறது. அதேபோன்று வருவாய் மற்றும் காலநிலை மற்றும் பொருளாதாரத்தின் எதிர்பாரா மாற்றங்களில் இருந்து மீள்திறனை அதிகரிக்கும் பொருட்டு இளைஞர் தொழில்முயற்சி உட்பட, விவசாய சேவைகளில் தனியார் துறையின் செயற்பாடுகளை வலுப்படுத்துவதையும் இது இலக்காக கொண்டுள்ளது.

வங்கி கடன் பெறக்கூடிய மதிப்புச் சங்கிலி முதலீடுகள் கண்டறியப்பட்டு, ஒரு செலவுப் பகிர்வு ஏற்பாட்டின் மூலம் நிதியளிக்கப்படும் இதில் முதலீட்டின் ஒரு பகுதியை IRDCRP ஊக்குவிப்பு முதலீடாகக் கையாளும் அதேநேரம் எஞ்சிய செலவை பயனாளிகள் வழங்கும் பங்களிப்புகள் மற்றும் ஒரு வர்த்தக வங்கியில் பாதுகாக்கப்பட்ட கடன் மூலம் ஏற்கும்.

**ஆக்கவளமுடைய கூட்டாண்மை வாயில்கள்**

இந்தத் திட்டம் குறித்த உற்பத்தியாளர் அமைப்புகளின் முன்னேற்ற நிலை மதிப்பீடு அடிப்படையில் இரு (02) ஆக்கவளமுடைய கூட்டாண்மை வாயில்களுக்கு உதவுவதோடு ஒவ்வொரு வாயிலும் வெவ்வெறு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்கும்.

வாயில் 1 – வளர்ந்துவரும் ஆக்கவளமுடைய கூட்டாண்மை: நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைப்புகளில் ஒப்பீட்டளவில் பலவீனமாக, மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களைப் பெற்ற, மற்றும்/ அல்லது முன்மொழியப்பட்ட முதலீட்டு செயற்பாட்டில் குறைந்த அளவான பங்கேற்பை காண்பிக்கும் உற்பத்தி அமைப்புகளுக்காக வடிவமைக்கப்பட்டது.

வாயில் 2 – வளர்ச்சி பெற்ற ஆக்கவளமுடைய கூட்டாண்மை: சிறந்த நிர்வாகம், வலுவான முகாமைத்துவ அமைப்புகள் மற்றும் முன்மொழியப்பட்ட முதலீட்டை தெளிவாகப் புரிந்துகொள்ளல் உட்பட ஏனைய தொடர்புடைய வளர்ச்சிபெற்ற பங்களிப்புகளுடன் வளர்ச்சி பெற்றதாக மதிப்பிடப்பட்டு உற்பத்தி அமைப்புகளுக்காக வடிவமைக்கப்பட்டது.

**வாயில் மூலமான நிதி அளவுருக்கள்**

| விபரம் | | வாயில் 1 | வாயில் 2 |
|---|---|---|---|
| முதலீட்டு மானியம் | | 35% அல்லது US$300,000 வரை (தோராயமாக ரூபா 93 மில்.) | 25% அல்லது US$500,000 வரை (தோராயமாக ரூபா 155 மில்.) |
| பயனாளிகளின் சொந்த பங்களிப்பு | | 15% | 25% |
| நிதி நிறுவன கடன் | | 50% | 50% |
| வர்த்தக முன்மொழிவு (BP) ஒன்றுக்கு பயனாளி ஒருவருக்கு அதிகபட்ச முதலீட்டு மானியம் | | US$2,000 (தோராயமான ரூபா 620,000) | US$2,500 (தோராயமான ரூபா 770,000) |
| வர்த்தகத் திட்டம் அல்லது உற்பத்திக் கூட்டாண்மை ஒன்றுக்கு பயனாளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை | விவசாயம் | 100 | 100 |
| | கால்நடை | 50 | 50 |
| | தோட்டம் | 20 | 20 |
| | மீன்பிடி | 20 | 20 |

**தகுதிவாய்ந்த துறைகள்**

விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்பு, வாசனைச் சரக்குகள், தோட்டப் பயிர்கள்

**விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்**

ஆர்வமுடைய உற்பத்தியாளர் அமைப்புகள் கமத்தொழில் அமைச்சு இணையதளத்தில் (www.agrimin.gov.lk) Documents → Forms (https://agrimin.gov.lk/downloads/forms) இன் கீழ் கிடைக்கப்பெறும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தைப் பயன்படுத்தி அல்லது எமது புதிய உள்ளீடுகளை வாசித்து பதிவுத் தபால் மூலம் தமது ஆர்வ வெளிப்பாட்டை (EOIs) சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகிறது. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "EOI 2026/1" என்று தெளிவாகக் குறிப்பிட்டு E01 இணை சமர்ப்பித்தல் வேண்டும்.

EOI இனை சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப இறுதித் திகதி 2026 ஏப்ரல் 10 அன்று (மேலதிக விபரங்களுக்கு மேலுள்ள இணையதள இணைப்பில் உள்ள வழிகாட்டலை வாசிக்கவும்)

தேர்வு நடைமுறை

திட்ட முகாமைத்துவப் பிரிவின் (PMU) மூலம் உருவாக்கப்பட்ட அளவுகோல் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் குறுகிய பட்டியலில் சேர்க்கப்படுவர். முதலில் வருவதற்கு முதலிடம் என்ற அடிப்படையில் தேர்வு மேற்கொள்ளப்படும். குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முக பரீட்சை, கள சரிபார்த்தல் மற்றும் முன்மொழியப்பட்ட மேம்பாட்டு நடைமுறை ஆகியவற்றின் மூலம் மதிப்பீடு செய்யப்படுவர்.

மேலதிக விபரம்

மேலதிக விபரங்களுக்கு 011 2 877 550 என்ற இலக்கத்தின் மூலம் திட்ட முகாமைத்துவப் பிரிவை தொடர்புகொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்**
**ஒன்றிணைந்த கிராமிய – நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை மீள்திறன் கருத்திட்டம்**
**திட்ட முகாமைத்துவப் பிரிவு**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி**
**பத்தரமுல்லை.**